சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளியின்

# கனவு

மாத இதழ்

## ஜூன் – 2024



## -FATHER'S DAY SPECIAL-

*Behind every great child is a truly amazing father.*

## ஜுன் 2024 இன் முக்கிய தினங்கள்

| | |
|---|---|
| ஜுன் 1 | உலாகளாவிய பெற்றோர்கள் தினம் |
| ஜுன் 5 | உலக சுற்றுச்சூழல் தினம் |
| ஜுன் 7 | உலக உணவு பாதுகாப்பு தினம் |
| ஜுன் 8 | உலக பெருங்கடல்கள் தினம் |
| ஜுன் 14 | உலக இரத்ததான தினம் |
| ஜுன் 16 | உலக தந்தையர் தினம்<br>உலக கடல் ஆமை தினம் |
| ஜுன் 20 | உலக அகதிகள் தினம் |
| ஜுன் 21 | சர்வதேச யோகா தினம் |
| ஜுன் 21 | உலக இசை தினம் |
| ஜுன் 29 | தேசிய புள்ளி விபர தினம் |
| ஜுன் 30 | சர்வதேச சிறு கோள் தினம் |

கனவு நாளிதழ் – பதிப்புரிமை

சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி, போடிநாயக்கனூர்


தொடர்புக்கு : 99948 77468, 93841 77468, 81225 77468

sowndeeswari@gmail.com website : sowndeeswarischool.com

# தலைப்பக்கம்

அன்பான மாணவர்களே, வாசகர்களே,

முழு இரவில் பனிமணமும், காற்றின் இதழும் உணர்த்தும் குளிரின் நினைவுகளுடன், பள்ளி திறப்பின் மாதம் ஜூன் மீண்டும் வந்துவிட்டது. கனவுகள் நிஜமாகும் திசையிலே நமது பயணம் மீண்டும் ஆரம்பமாகிறது. பள்ளியின் கதவுகளை மீண்டும் கடந்து செல்லும் உங்களின் முகமலர்ச்சியைக் காண, உங்கள் உலகினை அழகாக்க, உங்களுக்கான மேடையாக இந்த மாத இதழ் உருவாகியிருக்கிறது.



உங்கள் கனவுகளைச் சுமந்துகொண்டு, புத்தாண்டுப் புத்தகங்கள், புதிய நண்பர்கள், புதிய வகுப்பறைகள் மற்றும் புதிய வெற்றிகளுக்கான வழிகள் அனைத்தும் உங்களுக்காக காத்திருக்கின்றன. பள்ளியின் மதிப்பு மிக்க கொள்கைகளையும், உங்கள் கல்விப் பயணத்தின் முக்கியத்துவத்தையும் மீண்டும் நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

இந்த மாத இதழில், உங்கள் சாதனைகளைப் பகிர்ந்து கொள்ள, கலைத் திறமைகளை வெளிப்படுத்த, உங்கள் ஆழ்ந்த கருத்துகளை எழுத்தாகத் தர, நிறைய இடங்கள் உள்ளன. ஒவ்வொரு மாணவரும் தனித்துவமான திறமைகளை கொண்டிருப்பதால், உங்கள் திறன்களைப் பகிர்ந்து கொள்ள இது சிறந்த மேடையாக அமையும். உங்கள் கண்கள் கனவுகளால் நிறைந்து, உங்கள் உள்ளம் ஆர்வத்தால் மகிழும்.

உங்கள் படைப்புகள் இந்த இதழின் பக்கங்களில் ஒளிரச் செய்யுங்கள். உங்கள் கனவுகளுக்கு உயிர் கொடுங்கள், உங்கள் வார்த்தைகளால் எழுத்துக்களால் உலகை மாற்றுங்கள். நாம் எல்லோரும் ஒரே நம்பிக்கையில் இருக்கிறோம் ! உங்கள் கனவுகள் நிஜமாகும் நாள் நெருங்கிவிட்டது. உங்களின் வெற்றிக்காகக் காத்திருக்கும் அந்த நாளை சந்திக்க நாங்கள் அனைவரும் தயாராக இருக்கின்றோம்.

இனி, கல்வி கற்றல் மட்டும் அல்லாமல், மாணவர்களின் முழுமையான வளர்ச்சியையும் நோக்கி நாம் எடுக்கும் படிகள் எவ்வளவோ பெரிதாக இருந்தாலும் முறையான பயிற்சியால் வென்றெடுப்போம். ஒவ்வொரு பாடத்தையும் ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் அணுகுங்கள். உங்கள் சாதனைகள் நமது பள்ளியின் பெருமையைக் கூட்டும்.

இந்த மாத இதழ் 'கனவு' உங்கள் அசாதாரண திறமைகளைப் பகிர்ந்து கொள்வதாக இருக்கும். உங்களின் ஆழ்ந்த எண்ணங்களை எழுத்தின் வழியே வெளிப்படுத்தும் ஒரு வாசலாகச் செயல்படும். நீங்கள் எழுதும் ஒவ்வொரு வார்த்தையும், ஓவியத்தில் வரும் வண்ணங்களின் வெளிப்பாடாக, விண்மீன்களின் ஒளியாக, நிலவின் குளிர்ச்சியாக இருக்கும். உங்கள் புதிய பயணத்திற்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்!

தலைமையாசிரியர்

அத்தியாயம்–7

## கோப உணர்வை நிர்வகிப்பது எவ்வாறு?... எதிர் கொள்வது எவ்வாறு ?

கோபம் என்கிற உணர்ச்சியை நாம் அனைவரும் நமது வாழ்வில் பல தருணங்களில் எதிர்கொள்கிறோம். கோபத்தை தவிர்க்க முடியுமா ? என்றால் அது கேள்விக்குறிய விசயம் தான். ஆனால் கோபம் வரும் சமயங்களில் அதை எவ்வாறு கையாள்வது என்பதை அறிந்து கொண்டால் அந்த கோபத்தால் நமக்கோ, மற்றவர்களுக்கோ பதிப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள முடியும்.



முதலில் கோபம் வர காரணங்கள் என்ன என்பதை பார்ப்போம்...

நமது எதிர்பார்ப்புகளில் ஏமாற்றம் அடையும் போது கோபம் வருகிறது. நாம் மற்றவர்கள் மீது வைத்துள்ள நம்பிக்கைக்குச் சீர்குழையும் போது கோபம் வருகிறது. நாம் மேற்கொண்டுள்ள செயல்களில் பாதுகாப்பின்மையை உணரும் போது கோபம் வருகிறது. மற்றவர்களின் மீதான எதிர்மறையான அபிப்பிரயங்களால் கோபம் உண்டாகிறது. சில தவிர்க்க முடியாத பிரச்சனைகளை ஏற்றுக்கொள்ள முடியாததால் கோபம் உண்டாகிறது. வெறுப்பு என்கிற உணர்வை நம்மில் அதிகமாக ஊட்டி வளர்ப்பதால் கோபம் எழுகிறது.

கோபம் வரும் சமயங்களில் அதை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து நதியின் ஓட்டத்தில் பார்க்கலாம்.

நாம் கோபப்பட்டு பேசும் கடுமையான வார்த்தைகளால், எதிர்தரப்பினர் பாதிக்கப்படுகிறாரோ இல்லையோ, நாம் மிக கடுமையான பாதிப்பிற்கு உள்ளாகிறோம் என்பதை மறக்கக்கூடாது.

"கோபத்தோடு எழுந்திருப்பவன், நட்டத்தோடு அமர்வான்" என்பதே பழமொழி. இது முற்றிலும் உண்மையும் கூட. கோபத்தினால் அழிவு மட்டுமே ஏற்படும். எந்த நன்மையும், எப்போதும் கோபத்தினால் ஏற்படாது. நடந்து முடிந்த செயல்கள் எதுவும், கோபத்தினால் மாறாது என்ற உண்மையை புரிந்து கொண்டால் கோபத்தின் தன்மையில் கண்டிப்பாக மாற்றம் ஏற்படுத்தலாம்.

கோபம் வரும் சமயங்களில் நாம் வெளிப்படுத்துகிற கடுமையான வார்த்தைகள் மூலம் நமது தராதரத்தைக் குறைத்து கொள்கிறோம் என்பதை உணர்ந்து கொள்வது மிகவும் அவசியம். எதிர்தரப்பு நபர் மீது கோபம் வருகிற

சமயங்களில், நாம் அவர்களிடம் பேசும் விதமானது அந்த கோபத்திற்கான காரணத்தை உணர வைக்கும் விதமாக இருக்க வேண்டுமே தவிர, மேலும் எரிச்சலூட்டும் விதமாக அமைந்து விடக்கூடாது. கோபம் வரும் வேளையில் சிறிது நேரம் அச்சூழலை விட்டு விலகி இருப்பது, நாம் கோப உணர்வில் இருந்து நம்மை தற்காத்துக் கொள்ள சிறந்த வழிமுறையாகும்.

கோபம் என்பது நமக்கு நாமே அணிந்துள்ள முள் கவசம். இதனால் எதிர்தரப்பினருக்குப் பாதிப்பு மிகவும் குறைவே. நாம் தான் அதிகமாக மனதளவிலும், உடலளவிலும் பாதிக்கப்படுகிறோம்.

நாம் எப்போதும் நமது வாழ்வில் சந்திக்கக்கூடிய ஒவ்வொரு தருணங்களையும் விழிப்புணர்வுடன் எதிர்கொள்ளும்போது, அங்கு கோப உணர்வு ஏற்படுவதற்கான வாய்ப்பே ஏற்படாது. நம் அனைவரிடத்திலும் கோபத்தைக் கையாளுவதற்கான திறன்கள் பொதிந்து கிடக்கின்றன. அச்சமயத்தில் அந்த சூழலை எவ்வாறு எதிர்கொள்கிறோம் என்பதைப் பொருத்தே நேர்மறையான அல்லது எதிர்மறையான விளைவுகளையோ சந்திக்க நேரிடுகிறது.

மேற்குறிய விசயங்களைச் சற்று கவனத்தில் கொண்டு செயலாற்றும் போது கோப உணர்வை எளிதாக கையாள முடியும். நம் மீது கோபப்படுபவர்கள் மீது திரும்ப நம் கோபத்தை வெளிப்படுத்துவது என்பது, அவர் செய்த, அதே தவறை நாமும் செய்கிறோம் என்பதையே காட்டும். நம் மீது ஒருவர் கோபப்படும் போது அந்த இடத்தில் எக்காரணம் கொண்டும் நமது விளக்கத்தை தெரிவிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

நம் மீது கோபப்படும் போது, நமது விளக்கத்தை தெரிவிக்க முற்பட்டால், அது அவரது கோபத்தை மேலும் அதிகப்படுத்தும். அதற்கு இடமளிக்கக்கூடாது. கோபம் தணிந்தபின் நம்முடைய கருத்துக்களை எளிமையாகவும், தன்மையாகவும் எடுத்துரைக்க முற்பட வேண்டும்.

அடுத்தமுறை நம்மீது கோபப்படும் நபர் அதன் தன்மையை குறைத்துக்கொள்ள முற்படுவார். திட்டமிட்டு கோபப்படுபவர்களிடம் சற்று ஜாக்கிரதையாகவே அணுக வேண்டும். நமது செயலுக்கான உடனடி கோபத்தை, அவரது குணம் எனக் கருதி, கடந்து செல்ல முற்பட வேண்டும்.

கோபத்தைத் தாண்டி எவ்வளவோ விஷயங்கள் இருப்பதை அறிந்து கொள்வதில் ஆர்வத்தைக் காட்டலாம். தியான முறைகளை மேற்கொள்ளலாம். மகிழ்ச்சியான தருணங்களை நினைவு கூறலாம். இது போன்ற அந்நிலையை மாற்றும் செயல்பாடுகளினால் மட்டுமே கோபத்தை கையாளமுடியும்.

நதியின் பயணம் தொடரும் . . . .



## திருக்குறள் கதைகள் –1

சிங்கபுரி என்ற ஒருநாட்டினை சிரஞ்சீவி என்ற மன்னன் சிறப்பாக ஆட்சி செய்து வந்தான். அவனது மனைவி எழிலரசி. அவர்களுக்கு ஜெயந்தன் என்ற ஒரு மகன் இருந்தான். அவன் மீது அரசனும் அரசியும் அதிக அன்பு வைத்திருந்தனர். அவனுக்கு கல்வி கற்கும் வயது வந்தவுடன் குருகுலத்திற்கு கல்வி கற்க அனுப்பி வைத்தனர். நாட்டிற்கே இளவரசனாக இருந்தாலும் குருகுலத்தில் தங்கி கல்வி கற்பதே முறையாக இருந்தது.

அரசனும் அரசியும் மகனைப் பிரிய மனமில்லாமல் அனுப்பி வைத்தனர். ஜெயந்தனோடு, மந்திரியின் மகன் சிவபாலனும் கல்வி கற்கச் சென்றான். ஒரே வயதொத்த இருவரும் நண்பர்களாக இருந்தாலும் கல்வி கற்பதில் போட்டி போட்டு படித்து வந்தனர். வருடங்கள் கடந்தன. இருவரும் அனைத்துக் கலைகளையும் கற்றுத் தேர்ச்சி அடைந்தனர்.

குருகுலத்தில் ஒரு வழக்கமுண்டு. மாணவர்களின் பயிற்சி முடிந்து அனுப்புவதற்கு முன் சிறந்த மாணவனை குரு தேர்ந்தெடுத்து சிறப்பு செய்வார். இதனை மாணவர்கள் பெரும் பேராகக் கருதினர். ஜெயந்தனும், சிவபாலனும் அவ்வாறே இருந்தனர். எல்லோரும் எதிர்பார்த்த அந்த நாளும் வந்தது. குரு அனைவருக்கும் அறிவுரைகள் கூறி ஆசி வழங்கினார்.

இறுதியாக தன் கையிலிருந்த மணிகள் கோர்த்த மாலையினை எடுத்து சிவபாலனின் கழுத்தில் போட்டு விட்டு, இவன் தான் சிறந்த மாணவன் என்று கூறி அவனைக் கட்டியணைத்தார். எல்லோரும் இளவரசன் ஜெயந்தனே சிறந்த மாணவனாக வருவான் என்று நினைத்திருந்த போது, குருவின் இந்த செயல் திகைப்பூட்டியது. ஜெயந்தன் வேகமாக எழுந்து, "குருவே, என்னிடம் என்ன குறை கண்டீர்கள்? நான் தகுதியில்லாதவனா?" என்றான் கோபமாக. குருவோ

அமைதியாக ஜெயந்தனை அருகே அழைத்து, ஜெயந்தா! நீ வீரமிக்கவன். அனைத்து கலைகளிலும் சிறப்பாய் தேர்ச்சி பெற்றவன்தான். அதில் எந்த குறையுமில்லை. ஆனால் பெரியோர்களிடம் உன்னுடைய பணிவில்லாத் தன்மை, சக மாணவர்களிடம் நீ காட்டும் அலட்சியப் போக்கு, மன்னரின் மகன் என்ற இறுமாப்பு, இவையெல்லாம் தான் உனக்கு சிறந்த மாணவன் என்ற சிறப்பு கிடைக்காமல் செய்தன.



சிவபாலன் மற்றவர்களுக்கு மதிப்புக் கொடுத்து, அனைவரிடமும் அன்பாகப்பழகி சாதாரணமானவனாக உலா வந்தான். எப்போதும் தன்னை இந்த நாட்டு மந்திரியின் மகன் எனக் காட்டிக் கொள்ளவே இல்லை. அதுவே அவனுக்கு சிறப்பினைக் கொடுத்தது.

அதனால் தான் வள்ளுவர்,

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என்றார்.

ஒருவருக்கு உயர்வு தரக்கூடியது ஒழுக்கம் என்பதால், அந்த ஒழுக்கமே உயிரை விட மேலானதாகப் போற்றப்படுகிறது என்றார். ஜெயந்தனும் குருவின் அறிவுரையினை ஏற்று அதன்படி நடக்க உறுதி பூண்டான். ஆகவே, மாணவர்களே ஒழுக்கமான வாழ்வை கடைபிடித்தால் நீங்கள் உயர்வான இடத்தைப் பெறுவீர்கள்.

அ.லட்சுமி
தமிழாசிரியை.

## *வாகனத்தில் பிரேக் எதற்கு !*

ஒரு இயற்பியல் ஆசிரியர் தனது மாணவர்களிடம் ஒருமுறை வகுப்பறையில் "ஏன் வாகனங்களில் பிரேக்குகள் வைக்கப்பட்டுள்ளன" எனக் கேட்டார். மாணவர்களிடமிருந்து மாறுபட்ட பதில்கள் நிறைய வந்தன. "வாகனத்தை நிறுத்துவதற்கு, வேகத்தை குறைப்பதற்கு, மோதலைத் தவிர்ப்பதற்கு, மெதுவாகச் செல்வதற்கு " என பல்வேறு பதில்கள் மாணவர்களிடம் இருந்து வந்தன. அப்போது எங்கோ இருந்து "வேகமாக ஓட்டுவதற்கு" என்ற பதிலைப் கேட்டு அனைத்து மாணவர்களும் சிரித்தனர்.

ஆனால் அந்த பதிலே சிறந்த பதிலாக ஆசிரியர் தேர்ந்தெடுத்தார். ஆம் மாணவர்களே ! பிரேக்குகள் வாகனம் வேகமாக செல்வதற்குத்தான் வைக்கப்பட்டுள்ளன. காரில் பிரேக்குகள் இல்லை என்று வைத்துக் கொண்டால், காரை வேகமாக ஓட்ட முடியுமா என்று யோசியுங்கள்.

எனவே மாணவர்களே ! நம் சிந்தனை ஒவ்வொன்றையும் மாற்றி யோசித்து சிறப்பானதாக ஆக்க முயற்சியுங்கள். வெற்றி நிச்சயம். !

மா.முருகேசன்
இடைநிலை ஆசிரியர்




# மாணவர் முத்தாய் திகழ பத்து வழிகள்

1. அறிவு என்பது வாழ்க்கையின் முக்கிய கருவி.
   எதையும் அறிந்து கொள் துருவி !
2. நேரம் என்பது வாழ்க்கையின் மதிப்பு.
   அதை நன்றாக பயன்படுத்தி உன்னை உயர்த்து !
3. எதிலும் வைத்துக்கொள் இலட்சியம்,
   அதனை அடைவது வாழ்க்கையின் முக்கியம் !
4. தனிப்பட்ட முயற்சியின் சிறப்பு,
   உங்கள் வாழ்க்கை வாசலின் திறப்பு !
5. சவால்களை நம்பிக்கையுடன் சந்தி,
   அதற்கு மனதின் வலிமையை வை முந்தி !
6. நல்ல நட்பு உறவுகளை கொண்டாடு,
   ஒற்றுமையின் தத்துவத்தை வென்றெடு !
7. உடல் ஆரோக்கியம் உருவாக்கு,
   சிறந்த படிப்பு முறையை வளமாக்கு !
8. அன்பையும், பணிவையும் அணிகலனாக்கிடு
   அகத்தே முழுதும் அழகாகக்கிடு !
9. எண்ணங்களில் தெளிவு கொண்டிடு,
   உறுதியான வெற்றிகளை வென்றிடு !
10. எப்போதும் நல்ல செயல்களை செய்திடு,
    மனதளவில் மன்னனாய் மாறிடு !

ஆ.சதீஸ்குமார்
தலைமையாசிரியர்








# PUZZLE CORNER

## Rebus puzzles
**Can you guess the words and expressions?**

| | | |
|---|---|---|
| M1Y L1I1F1E | Get it<br>Get it<br>Get it<br>Get it | Try $\frac{\text{stand}}{2}$ |
| TRAVEL<br>———<br>ccccccc | FAST | T<br>O<br>W<br>N |
| EYE<br>EYE | father<br> | ONCE<br> |
| POT oo oo oo oo | D movie<br>D movie<br>D movie | SECRET ←<br>SECRET<br>SECRET |

# PUZZLE CORNER

## There are 6 Words in the picture. Find the words




மேற்கண்ட படத்தில் ஆறு ஆங்கில வார்த்தைகள் மறைந்துள்ளன.

கண்டுபிடியுங்கள் !



# உழைப்பால் உயர்ந்த ராக்ஃபெல்லர்



ராக்ஃபெல்லர் என்ற அமேரிக்க கோடீஸ்வரர் ஒரு முறை விமானத்தில் பயணம் செய்து கொண்டிருந்தார். அப்போது அவர் முதுமை பருவத்தில் இருந்தார்.

ராக்ஃபெல்லருக்கு அருகில் அமர்ந்திருந்த ஒர் இளைஞன் அவருடன் உரையாடிக் கொண்டிருந்தான். அந்த இளைஞன் அவரைப் பார்த்து "ஐயா ! தாங்கள் தான் போதுமான அளவு செல்வம் சேர்த்து விட்டீர்களே ! உங்களுக்கு எந்த விதமான கவலையோ, தொல்லையோ இருக்காதே ! இவ்வளவு முதுமையிலும் இத்தனை சுறுசுறுப்பாக உழைத்துக் கொண்டிருக்கிறீர்களே ! இது தேவைதானா ? ஓய்வு எடுத்துக்கொண்டு ஓரிடத்தில் இருந்து அமைதியாக காலத்தை கழிக்கலாம் அல்லவா !" என்று கேட்டான்

அதற்கு ராக்ஃபெல்லர் நல்ல கேள்வி என்று சிரித்துக் கொண்டே தன்னுடைய பதிலை கூறினார். "இப்போது நாம் பயணம் செய்து கொண்டிருக்கிறோமே, இந்த விமானம் தற்போது உயரத்தில் பறந்து கொண்டிருக்கிறது. இனி இதன் இயந்திரங்களை நிறுத்திவிட்டால் என்ன " என்று கேட்டார்.

"அது எப்படி முடியும் ? இயந்திரங்களை நிறுத்திவிட்டால் நமது விமானம் விபத்துக்குள்ளாகி தரையில் மோதி விடுமே ! நாம் அனைவரும் சாக வேண்டிய நிலை அல்லவா ஏற்படும்" என்று பரபரப்புடன் பதில் சொன்னான் இளைஞன்.

ராக்ஃபெல்லர் சிரித்துக்கொண்டே " தம்பி விபத்து ! என்ற சொல் காதில் விழுந்த உடனே நீ எப்படி பயப்படுகிறாய்? நமது வாழ்க்கையும் ஒரு விமான பயணம் போன்றது தான். நாம் என்று நமது உழைப்பை நிறுத்தி விடுகிறோமோ அன்றே நமது உடலும் மனமும் சீர்கெட்டு விடும் என்று சொன்னார் ராக்ஃபெல்லர்.

கி.ரேவதி
பட்டதாரி ஆசிரியை


## பிணி தீர்க்கும் பிஞ்சுகள்

| | |
|---|---|
| மாதுளம் பிஞ்சு | வயிற்றுப்போக்கை நிறுத்தும், சீரண சக்தியை பெருக்கும் |
| வாழைப் பிஞ்சு | வயிற்றுப் புண்ணைக் குணப்படுத்தும், நீரழிவைக் கட்டுப்படுத்தும் |
| பலாப் பிஞ்சு | பித்த நோய்களைத் தீர்க்கும் |
| அத்திப் பிஞ்சு | மூல நோயைப் போக்கும் |
| முருங்கைப் பிஞ்சு | தாதுவைப் பெருக்கும்., கண்களுக்கு இதமளிக்கும். |
| மாம்பிஞ்சு | கப நோய்களைத் தீர்க்கும், வாந்தியைக் கட்டுப்படுத்தும். |
| அவரைப் பிஞ்சு | கண்நோய்களைத் தீர்க்கும் |
| வெள்ளரிப் பிஞ்சு | நீர்க் கடுப்பை நீக்கும். உடல் சூட்டைத் தணிக்கும் |
| நார்த்தை பிஞ்சு | சீரணத்தை மேம்படுத்தும். குடலை சுத்தப்படுத்தும். |

பா.ஜெயக்குமாரி
இடைநிலை ஆசிரியர்


## சின்னச் சின்ன ஆங்கில வாக்கியம் ! சிரித்துக் கொண்டே கற்கலாம் !






# ANSWER CORNER

## Rebus puzzles

| | | |
|---|---|---|
| M1Y L1I1F1E<br>Four ones in my life | Get it<br>Get it<br>Get it<br>Get it<br>Forget it | Try stand / 2<br>Try to understand |
| TRAVEL / CCCCCCC<br>Travel overseas | FAST<br>Breakfast | T<br>O<br>W<br>N<br>Downtown |
| EYE<br>EYE<br>Eye shadow | father<br><br>Step father | ONCE<br><br>Once upon a time |
| POT OO OO OO OO<br>Potatoes (pot 8 O's) | D movie<br>D movie<br>D movie<br>3D movie | SECRET ←<br>SECRET<br>SECRET<br>Top secret |

# ANSWER CORNER

## There are 6 Words in the picture.
## Find the words




மேற்கண்ட படத்தில் ஆறு ஆங்கில வார்த்தைகள் மறைந்துள்ளன.

கண்டுபிடியுங்கள் !

# கவிதைப் பக்கம்

## கல்வி

கல்வி என்பது கடல்–அதனைக்
கற்றுத் தருவது பணியல்ல,
பண்பு, தவம், சேவை !
நம்பிக்கையே கைவிட்டாலும்
கற்ற கல்வி என்று கைவிடாது.

இருளில் இருந்து வெளிச்சம்
நோக்கி நகர்வதே கல்வி

கல்விச்சாலையை திற !
சிறைச்சாலையை மூடு !

அ.சுபிஸ்கா
ஆறாம் வகுப்பு

## தன்னம்பிக்கை

எத்தனை முறை விழுந்தாலும்
எழுந்து நின்று போராடு !
யார் .. என்ன சொன்னாலும்
நேர்மையாக நின்று உரையாடு !
கவலைப்படாமல் உன் பாதை
நோக்கி முன்னேறி ஓடு !
வெற்றியை விதைத்து
வீம்பை விடுத்து
என்னென்றும் இலட்சியம் நோக்கி
தன்னம்பிக்கையோடு
தளராமல் நடைபோடு
வெற்றி வாசல் வந்து
உன்னை வரவேற்கக் காத்திருக்கும்.

ரா.ராகவர்ஷினி
ஆறாம் வகுப்பு

## தந்தையர் தினம்

அன்புள்ள அப்பா,
ஆண்டவன் அருகில் இருக்க நினைத்தான்!
அதனால் தான் அப்பாவாய்
வடிவம் எடுத்தானோ!
தோளில் சுமக்கும் பாரத்தை
தூக்கி  கீழே வைத்து விடலாம்!
நெஞ்சில் நிறைந்த பாரத்தை
எதிர்பார்ப்பின்றி சுமந்தீரே!!
கனவுகள் மட்டும்
கையிருப்பாய்!
காரியமாக்கி தந்தீரே
உந்தன் உழைப்பால்!
கடு கடு பேச்சு மட்டும்
உந்தன் சிறப்பாய்!
களங்கம் இல்லா அன்பினை காட்டினீரே
உந்தன் செயலால்!
கடு கடு பேச்சு மட்டும்
உந்தன் சிறப்பாய் !
களங்கம் இல்லா அன்பினை
காட்டினீரே
உந்தன் செயலால்!
நாங்கள் உயரங்களைத் தொட
வியர்வையில் குளித்தவரே!
பட்டுப் போன உந்தன்
கால்களைத் தொட்டு வணங்க
நினைக்கின்றேன் !
இன்று
தந்தையர் தினமென்றார்கள்!
காற்றில் பறந்து
போன உம்மை எண்ணி
நூலறுந்த பட்டமாய்
தவிக்கின்றேன்!
தேம்பும் மனதைத்
தேற்ற வருபவர்
யார்?

அ.லட்சுமி
தமிழாசிரியை.

## அப்பாவுக்கு நன்றி !

அப்பா என்றவுடன் எனக்கு முதலில் வருவது அவரின் சிரிப்பு
அவர் மகளுக்கு, மகனுக்கு முதல் கதாநாயகன்
எங்களின் உயரத்திற்கு உழைக்கும் உழைப்பாளி
குடும்பத்தைத் தாங்கும் தூண் !
பாசத்தின் வடிவம்
பாதுகாப்பின் கோட்டை !
தியாகத்தின் சுடர்
உன் கரங்களில் மட்டுமே
தன் தேவைகளை நிறைவேற்றாத திறனாளி
எங்களுக்கான வழிகாட்டி !
உன் தியாகத்திற்கும், பாசத்திற்கும்
மதிப்பு நிர்ணயிக்க இயலாது
இருந்தாலும் ! என் உயிரின் மேலான
என் அப்பாவுக்கு
தந்தையர் தினத்தில்
கோடான கோடி நன்றிகள் !

ம.மகேஸ்வரி
ஏழாம் வகுப்பு

## கல்விப் பொன்மொழிகள்

* எடுத்தால் குறைவது செல்வம்
  கொடுத்தால் வளர்வது கல்வி !


* பிறவித் திறமையை வளர்த்தெடுப்பது
  கல்வி மட்டுமே

மா.முத்துமீனா
ஆறாம் வகுப்பு






# வாங்க
# வரையப் பழகலாம் !



# தெரிந்த கேள்விகள் ! தெரியாத பதில்கள் !

**கேள்வி :** மழை சில இடங்களில் அதிகமாகவும், சில இடங்களில் குறைவாகவும், சில இடங்களில் பெய்யாமலும் இருக்கிறது அதற்கான காரணங்கள் என்ன ?



1. **புவியியல் அமைப்பு:**

மலைப்பாங்கு : மலைகள், மழை இழுப்பவர்களாக (rain shadow effect) செயல்படுகின்றன. மேகங்கள் மலைக்கு மேல் ஏறும்போது குளிர்ந்து மழை பெய்யும். ஆனால், மலைக்கு மறுபுறம் இருக்கும் இடங்கள் மழையை குறைவாகப் பெறலாம்.

கடலோரம் : கடலோரப் பகுதிகள் அதிகமாக மழை பெறுகின்றன, ஏனெனில் கடல் காற்று நீரை ஆவியாக்கி, மீண்டும் மழையாக மாற்றுகின்றது.

2. **பருவநிலை மாற்றங்கள்:**

பருவநிலை மாற்றங்கள் மற்றும் குளிர் காலங்கள் மழையின் அளவை மாற்றுகின்றன. உதாரணமாக, பனி காலங்களில் சில இடங்களில் மழை குறைவாக இருக்கும்.

வெப்பமண்டலப் பருவநிலை மாறுதல் உலகின் பல பகுதிகளின் மழையின் அளவை மாற்றுகின்றன.


3. **மனிதச் செயற்பாடுகள்:**

மண் சேகரிப்பு, வனப்பகுதி அழிவு, நகர்மயமாதல் போன்ற மனிதச் செயல்கள் மழையை பாதிக்கின்றன. வனப்பகுதி அழிவு ஈரத்தன்மையை குறைத்தும், மண் சேகரிப்பு மழையின் வழக்கமான சூழலை மாற்றுகின்றது.

இந்த காரணங்கள் அனைத்து, மழையின் அளவு மற்றும் பரவலுக்கு முக்கியமானது. இதனால், சில இடங்களில் அதிக மழையும், சில இடங்களில் குறைவான மழையும், சில இடங்களில் மழை இல்லாமலும் இருக்கிறது.




ஆ.சதீஸ்குமார்
தலைமையாசிரியர்



# Solve the Riddles

1) What goes up but never comes down?
2) What can you break, even if you never pick it up or touch it?
3) What is always in front of you but can't be seen?
4) What month of the year has 28 days?
5) What gets wet while drying?



The most expensive liquid in the world is "tear" ( 1% water + 99% feelings) Think before you hurt someone.

D.Vinotha
B.T.Asst

Riddles Answers :

1. Your age 2. A Promise 3. The Future 4. All of them 5. A Towel

# நீ யார் !

ஒரு நபர் வேலைய முடிச்சிட்டு வீடு திரும்பும் போது ஒரு கழுகு முட்டையையைப் பார்க்கிறாரு. கழுகு எங்கேயாச்சும் பக்கத்துல இருக்கா ? அதோட முட்டைய அங்க போய் வச்சிராலாம்னு பார்க்கிறாரு. எங்கேயுமே கழுகைக் காணோம். அந்த முட்டையை அப்படியே விட்டுப் போக மனசில்லாத அவரு தன்னோட கோழிப்பண்ணையில கொண்டு போய் பத்திரமா வைக்கறாரு.. கோழி தன் முட்டைதான்னு நினைச்சு அடைகாக்க ஆரம்பிக்குது.

கொஞ்சநாள் கழிச்சு கழுகு வெளில வருது. அது தன்னை கோழினு நெனைச்சிக்கிட்டு கோழி, கூட்டத்தோடயே வாழ ஆரம்பிக்குது. எல்லா கோழியும், இரை உண்ணும் போது அந்தக் கழுகு மட்டும் வானத்தை நோக்கிப் பார்க்குது. கழுகுகள் வட்டமிடுறதைப் பார்த்த அந்த கழுகு, நானும் இந்த மாதிரி ஒரு கழுகாப் பிறந்திருக்கக் கூடாதா ? எவ்வளவு சந்தோஷமா வானத்தில் பறக்கலாம் ! அப்படின்னு நெனைக்குது.



இப்படியே நெனைச்சு, நெனைச்சு அதுக்கு வயசும் ஆயிடுச்சு. இதே மாதிரிதான் நமக்கு நிறைய திறமை இருந்தும் பயம், தயக்கத்துனால நிறைய வாய்ப்புகளை நழுவ விட்டிருக்கிறோம். நாம் இந்தக் கதையைக் கேட்ட பிறகு கோழிக்கூண்டுல வாழுற கழுகா இருக்க போறமா ? வானத்துல வட்டமிடுற கழுகா இருக்கப்போறமா ? அதை நாமதான் முடிவு பண்ணணும் ! முயற்சி செய்யணும் மாணவர்களே !



சு.இலட்சுமி

இடைநிலை ஆசிரியர்

## முதல் செயற்கை உயிரணு

அமேரிக்க விஞ்ஞானி கிரெய்க் வென்டர் தலைமையிலான குழு முதல் செயற்கை உயிரணுவை (செல்) கண்டறிந்துள்ளனர். "குளோனிங்" முறையில் ஒரு உயிரினத்தின் உயிரணுவிலிருந்து மரபணுவை எடுத்து, மற்றொரு உயிரணுவில் செலுத்தி அதே உயிரினத்தை உருவாக்கினார்.

ஆனால் தற்போது நன்கு வளர்ச்சியடைந்த ஒரு உயிரினத்தின் மரபணுவை, மற்றொரு உயிரினத்தின் உயிரணுவில் செலுத்தி, புதிய உயிரணுவை உருவாக்கியுள்ளனர். இந்த செயற்கை உயிரணு மருத்துவ உலகில் புதிய பரிமாணங்களை உருவாக்கும் என்பதில் சந்தேகமில்லை என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ச.ரஞ்சிதா
ஏழாம் வகுப்பு

## தமிழின் பொன்னான பழமொழிகள்

- மின்னுவெதல்லாம் பொன்னல்ல
- ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன்
- குறைகுடம் கூத்தாடும்
- பதறிய காரியம் சிதறிப் போகும்
- அக்கம் பக்கம் பார்த்துப் பேசு
- உழைப்பில்லாமல் ஊதியமில்லை
- இனம் இனத்தோடு சேரும்
- அதிகம் கேள் ! குறைவாகப் பேசு

ச.ரஞ்சிதா
ஏழாம் வகுப்பு

# அரச மரத்தின் அற்புதம்

ஒரு அரசமரம் ஒரு மணிநேரத்திற்கு 2240 கிலோ கரியமிலக் காற்றை உட்கொண்டு 1712 கிலோ சுத்தமான காற்றை கொடுக்கிறது. இம்மரம் 24 மணி நேரமும் சுத்தமான காற்றை வெளியிடும். ஆகையால் பொது இடங்கள், குளக்கரை போன்ற இடங்களில் இம்மரத்தினை வளர்ப்போம். வருங்காலங்களில் கரியமில வாயுவின் அளவைக் குறைப்போம். ஆக்ஸிஜன் அளவை பெருக்குவோம்.

து.விநோதா
பட்டதாரி ஆசிரியை

## பழமொழி பத்து !


1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2. அடியாத மாடு படியாது.
3. அடக்கம் உடையார் அறிஞர், அடங்காதவர் கல்லார்
4. அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
5. அழித்த கொல்லையில் குதிரை மேய்ந்தாலென்ன ? கழுதை மேய்ந்தாதெலென்ன.
6. அன்னைக்கு உதாவதவன் யாருக்கும் ஆகான்.
7. அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான்.
8. நல்ல மாட்டிற்கு ஒரு சூடு
9. இருகினால் களி இளகினால் கூழ்
10. உயர உயர பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகது

மு.கீர்த்தனா ஸ்ரீ
ஆறாம் வகுப்பு




# Our School Student's Drawings









# Our School Student's Drawings





HAPPY
FATHER'S
DAY
TO THE BEST DAD IN THE WORLD

HAPPY FATHER'S DAY
TO THE BEST DAD IN THE WORLD

# தந்தையர் தினச் சிறப்புப் பக்கம்




































# தந்தையர் தினச் சிறப்புப் பக்கம்




தந்தையர் தினம் எங்கள் பள்ளியில் கொண்டாடப்பட்ட போது, குழந்தைகளின் தந்தையர்களுக்கு குழந்தைகள் பாத பூஜை செய்து தந்தையின் தியாகத்திற்கு நன்றி செலுத்தினர். தந்தையில்லா குழந்தைகள் கண்கலங்கி நிற்கவே ! அவர்களை அழைத்து, தலைமையாசிரியராக அவர்களை அரவணைத்து, ஓர் தந்தையாக ஆசிர்வதித்தேன். தந்தையாக மாறி ஆசிர்வதித்த அந்த நிமிடம் ! என் மனது நெகிழ்ச்சியால் அடைந்த நிறைவை இதுவரை என் வாழ்வில் கண்டதில்லை. வாய்ப்பளித்த இறைவனுக்குக் கோடான கோடி நன்றிகள் !

ஆ.சதீஸ்குமார்,

தலைமையாசிரயர்



KANAVU MAGAZINE

# Back to School

10 June, 2024




Welcome to new students in this class, I hope you can get along quickly and learn well.

## SOWNDEESWARI MIDDLE SCHOOL BODINAYAKANUR